1817

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** தொடர்பாடற் செயன்முறை பிரதானமாக
(1) கருத்துக்களைக் கொண்டிருக்கும்.
(2) சம்பவங்களைக் கொண்டிருக்கும்.
(3) குறியீடுகளைக் கொண்டிருக்கும்.
(4) தகவல்களைக் கொண்டிருக்கும்.
(5) தனியாட்களைக் கொண்டிருக்கும்.

**2.** தொடர்பாடுநரது கருத்துக்களையும் உணர்வுகளையும் செய்திகளாக மாற்றும் செயன்முறை
(1) கற்பனையாக்கம் ஆகும்.
(2) குறிமுறையவிழ்ப்பு ஆகும்.
(3) பேச்சு ஆகும்.
(4) குறிமுறையாக்கம் ஆகும்.
(5) நிலைநோக்கு ஆகும்.

**3.** சுவடி / எழுத்துரு ஆக்குநர் (script writer) ஒருவரது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட படைப்பாக்கம் ஒன்றில் காணக் கிடைக்கக்கூடிய தொடர்பாடல் வகை எது?
(1) படைப்பாக்கத் தொடர்பாடல்
(2) ஆளிடைத் தொடர்பாடல்
(3) எழுத்துத் தொடர்பாடல்
(4) முறைசாராத் தொடர்பாடல்
(5) ஆளுள் தொடர்பாடல்

**4.** தொடர்பாடலுக்கும் அது நிகழ்த்தப் பெறும் சுற்றயலுக்குமான இணைப்பானது
(1) குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறது.
(2) குறியீட்டுத் தன்மையானது.
(3) பல்வகைத் தன்மையைக் கொண்டிருக்கிறது.
(4) சூழல் (context) சார்ந்திருக்கிறது.
(5) ஒரு வழி மற்றும் இரு வழியானதாயுள்ளது.

**5.** தொலைபேசி மற்றும் தந்தித் தொழினுட்பத்தின் வளர்ச்சியின் பேறாக தோற்றம் பெற்றது எது?
(1) செய்திப்பத்திரிகை
(2) சஞ்சிகை
(3) மின் - செய்திப்பத்திரிகை
(4) தொலைக்காட்சி
(5) வானொலி

**6.** ஊடாட்டத் தொடர்பாடலில் (interactive communication) ஈடுபடுவதற்கு அதிகம் வசதியாக இருப்பது
(1) ஆளிடைத் தொடர்பாடல் ஆகும்.
(2) குழுத் தொடர்பாடல் ஆகும்.
(3) மெய்நிகர்த் தொடர்பாடல் ஆகும்.
(4) கருவி உதவியுடனான ஆளிடைத் தொடர்பாடல் ஆகும்.
(5) கருவி உதவியுடனான குழுத் தொடர்பாடல் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

7. சமஷ்டித் தொடர்பாடல் ஆணைக்குழு
(1) அமெரிக்காவின் ஊடக ஒழுங்குபடுத்தல் நிறுவனம் ஆகும்.
(2) பிரிட்டனின் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் நிறுவனம் ஆகும்.
(3) பொதுச்சேவைகளை ஊக்குவிக்கும் உலகளாவிய நிறுவனம் ஆகும்.
(4) வானொலி அலைவரிசைகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை ஆகும்.
(5) சமூக ஊடக ஒழுங்குபடுத்தல் நிறுவனம் ஆகும்.

8. வானொலி ஊடக நிகழ்ச்சியொன்றில் உயர் கவனம் செலுத்தப்பெறும் பகுதியினராக அமைபவர்
(1) தொடர்பாடுநர் ஆவார்.
(2) உரிமையாளர் ஆவார்.
(3) அனுசரணையாளர் ஆவார்.
(4) பெறுநர் ஆவார்.
(5) செய்தியாளர் ஆவார்.

9. அன்றாட வாழ்விற்குத் தேவையான தகவல்கள் அடங்கியதாக குறிக்கப்பட்ட காலப்பகுதியில், ஒன்றிணைத்து கட்டப்பட்டுத் தொடர்ந்து வெளியிடப்படுவது
(1) செய்திப்பத்திரிகைகள் ஆகும்.
(2) புத்தகங்கள் ஆகும்.
(3) சமயத் துண்டுப்பிரசுரங்கள் ஆகும்.
(4) சஞ்சிகைகள் ஆகும்.
(5) கட்டளைகள் ஆகும்.

10. வெகுசன ஊடகத் தகவலில் அதிகம் வெளிப்படையாக காணக் கிடைக்கக்கூடிய அம்சம்
(1) பல்வகைமை ஆகும்.
(2) சிக்கற்தன்மை ஆகும்.
(3) நாளாந்த அடிப்படை ஆகும்.
(4) கவனஈர்ப்பு ஆகும்.
(5) நம்பகத்தன்மை ஆகும்.

11. தகவல்களைச் சேமிக்கவும் நீண்ட காலமொன்றுக்கு அவற்றைப் பேணவுமான அடிப்படை உருவானது
(1) மொழியின் தோற்றத்துடன் ஆகும்.
(2) எழுதுதல் ஆரம்பமானதுடன் ஆகும்.
(3) வெகுசன ஊடகங்களின் ஆரம்பத்துடன் ஆகும்.
(4) அச்சுத் தொழினுட்பத்தின் வளர்ச்சியுடன் ஆகும்.
(5) டிஜிட்டல் தரவுத்தளத்தின் உருவாக்கத்துடன் ஆகும்.

12. வெகுவன ஊடகங்களால் வழங்கப்படும் தகவல்கள் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது
(1) ஊடக உரிமையாளர்களால் ஆகும்.
(2) விளம்பரதாரர்களால் ஆகும்.
(3) ஆசிரியர்களால் ஆகும்.
(4) வாயிற்காப்பாளர்களால் ஆகும்.
(5) தகுதிவாய்ந்த அதிகாரிகளால் ஆகும்.

13. பொதுசனத் தொடர்பு என்பது மனித விழுமியத்தை உருவாக்குவதற்காக நல்லெண்ணத்துடன் முன்னெடுக்கப்படும் கருத்துப் பிரவாகம் எனக் கூறப்பட்டது
(1) எட்வேர்ட். எல். பெர்னேவினால் ஆகும்.
(2) சார்ள்ஸ் பிளேகார்ட்டினால் ஆகும்.
(3) சாம் பிளக்கினால் ஆகும்.
(4) ஜோசப் ஆர். டொமினிக்கினால் ஆகும்.
(5) பொதுமக்கள் தொடர்பாடலுக்கான பிரித்தானிய பட்டய நிறுவனத்தினால் ஆகும்.

14. பின்வரும் சிந்தனைகளைக் கருத்திற்கொள்க.
A - பெறுநருக்கு ஏற்றாற்போல வார்த்தைகள் தெரிவுசெய்யப்பட முடியும்.
B - கவனத்துடன் செவிமடுக்கப்பட முடியும்.
C - வாய்மொழியற்ற தொடர்பாடல் பயன்படுத்தப்படக் கூடும்.
D - குறிப்பிட்ட படிநிலையொன்று காணப்படக் கூடும்.
மேற்படி தரப்பட்ட சிந்தனைகளில், வினைத்திறன்மிக்க பேச்சுத் தொடர்பாடலுடன் அதிகம் தொடர்புடையவை எவை?
(1) A மற்றும் B
(2) A மற்றும் C
(3) B மற்றும் C
(4) B மற்றும் D
(5) C மற்றும் D

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

15. ஊடக விளங்கறிவுடன் தொடர்புடைய அறிவுக்கட்டமைப்புகள் விருத்தி பெறுவது
(1) அனுபவம் மூலமாகும்.
(2) எதேச்சையாக ஆகும்.
(3) தனியாளின் குறிக்கோள்களின் அடிப்படையில் ஆகும்.
(4) சமூக ஊடாட்டத்தின் மூலமாகும்.
(5) தெரிவுசெய்யப்பட்ட தகவற் சேர்மானத்தின் அடிப்படையில் ஆகும்.

16. பயிர்களைப் பாதுகாப்பதற்கும், அதிர்ஷ்டமற்ற ஆபத்துகளைத் தடுப்பதற்கும், பொழுதினைப் போக்கவும் கூடுமான பாரம்பரிய ஊடக முறைமை
(1) நாட்டார் பாடல்கள் ஆகும். (2) நாட்டார் கதைகள் ஆகும்.
(3) கோலம் நாடகம் ஆகும். (4) பேயோட்டுதல் ஆகும்.
(5) சொக்கரி நாடகம் ஆகும்.

17. தற்போது ஒருவர் இணையத்தைப் பயன்படுத்தி செய்திப்பத்திரிகைகளை வாசிக்கவும், வானொலியைச் செவிமடுக்கவும், தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்களைப் பார்வையிடவும் முடியும். இந்தச் சூழ்நிலையை விபரிக்கும் எண்ணக்கரு
(1) சிறுகூறுகளாக்குதல் ஆகும்.
(2) ஊடகக் குவிகை ஆகும்.
(3) கட்டுப்பாட்டுத் தளர்வு ஆகும்.
(4) பூகோளமயமாதல் ஆகும்.
(5) ஊடக ஒழுங்குபடுத்தல் ஆகும்.

18. 'Many Voices, One World' (பல குரல்கள், ஓர் உலகம்) அறிக்கை முன்வைக்கப்பட்டது
(1) ஐக்கிய நாடுகள் சபையினால் ஆகும்.
(2) அணிசேரா உச்சிமாநாட்டினால் ஆகும்.
(3) யுனெஸ்கோவினால் ஆகும்.
(4) பொதுநலவாய நாடுகளினால் ஆகும்.
(5) ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஆகும்.

19. ஊடக விளங்கறிவு ஓர் பல்பரிமாண எண்ணக்கரு ஆகும். அதனுடன் உரித்தான பிரதான பரிமாணங்கள்
(1) உணர்வு, உணர்ச்சி, அழகியல் மற்றும் ஒழுக்கம் ஆகிய பரிமாணங்கள் ஆகும்.
(2) உணர்ச்சி, அழகியல், ஒழுக்கம் மற்றும் அரசியல் ஆகிய பரிமாணங்கள் ஆகும்.
(3) அழகியல், ஒழுக்கம், தனிப்பட்ட தன்மை மற்றும் ஊடாட்டம் ஆகிய பரிமாணங்கள் ஆகும்.
(4) ஒழுக்கம், தனிப்பட்ட தன்மை, அரசியல் மற்றும் உணர்ச்சி ஆகிய பரிமாணங்கள் ஆகும்.
(5) தனிப்பட்ட தன்மை, ஊடாட்டம், உணர்ச்சி மற்றும் உணர்வு ஆகிய பரிமாணங்கள் ஆகும்.

20. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்
(1) உடன்படிக்கை இயல்புடன் நேரடிச் சட்டப் பிணைப்பைக் கொண்டது ஆகும்.
(2) பேச்சு மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆவணமொன்று ஆகும்.
(3) ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த நாடுகளின் பிரஜைகளுடன் தொடர்புடையது ஆகும்.
(4) முதலாம் உலகப்போர் அனுபவங்களின் பெறுதியொன்றாக வெளியிடப்பட்டது ஆகும்.
(5) பல நாடுகளிலும் அடிப்படை உரிமைகளின் தோற்றுவாயாக உருவாக்கப்பட்டது ஆகும்.

21. புதிய ஊடகம் மற்றும் சமூக ஊடகத்திற்கெனக் குறிப்பிடப்படக்கூடிய பணிகள்
(1) தகவல்களையும் பொழுதுபோக்கையும் வழங்குதல் ஆகும்.
(2) சமூகமயமாதலும் கல்வியூட்டலும் ஆகும்.
(3) மாற்றுத் தளத்தையும் உறவுகளையும் உருவாக்குதல் ஆகும்.
(4) கண்காணித்தலும் பொருட்கோடலும் ஆகும்.
(5) பாதுகாவலர் ஒருவர் மற்றும் ஆசிரியர் ஒருவரது வகிபாகங்கள் ஆகும்.

22. சினிமாவுடன் ஒப்பிடும்போது தொலைக்காட்சியின் விசேட இயல்பொன்றாக அமைவது
(1) கூட்டுப் படைப்பாக்கச் செயன்முறையொன்றைக் கொண்டிருப்பது ஆகும்.
(2) சுவடிகளை/எழுத்துருக்களைக் (scripts) கொண்டிருப்பது ஆகும்.
(3) கலைத்துவமான ஊடகம் ஆகும்.
(4) பொதுவான ஊடகம் ஆகும்.
(5) காட்சி விளங்கறிவைப் பயன்படுத்துவது ஆகும்.


[பக். 4 ஐப் பார்க்க

**23.** தற்காலப் பிரசித்த பண்பாட்டில் தொலைக்காட்சி ஊடகம் அதிக கவனக்குவிப்பைப் பெறும் பண்பு
(1) கல்விக்கான பெறுமதி ஆகும்.
(2) மானுடத்திற்கு மதிப்பளித்தல் ஆகும்.
(3) எளிமைக்கான பெறுமதி ஆகும்.
(4) அழகியற் கூறுகளுக்கான முக்கியத்துவம் ஆகும்.
(5) நுகர்வுக்கான கவனஈர்ப்பு ஆகும்.

**24.** ஊடகங்களால் உருவாக்கப்படும் மாயை மற்றும் யதார்த்தத்தை அடையாளங் காண்பதற்குத் தேவையான புத்திக்கூர்மையை விருத்தி செய்வது
(1) ஊடகக் கல்வி ஆகும்.
(2) ஊடக விளங்கறிவு ஆகும்.
(3) ஊடகத் திறனாய்வு ஆகும்.
(4) ஊடக ஆய்வு ஆகும்.
(5) ஊடகங்கள் மீதான கவனக்குவிப்பு ஆகும்.

**25.** “வெவ்வேறான வெகுசன ஊடகங்கள் கூறுவதை விட எங்களது காலத்தில் எமது முன்னோர்களிடமிருந்தே அனைத்து அறிவையும் பெற்றுக்கொண்டோம்” எனத் தாத்தா கூறினார். அவர் பேசுவது,
(1) நாட்டார் நம்பிக்கைகள் பற்றி ஆகும். (2) காப்பியங்கள் பற்றி ஆகும்.
(3) நாட்டாரியல் பற்றி ஆகும். (4) தொன்மங்கள் பற்றி ஆகும்.
(5) நாட்டார் கதைகள் பற்றி ஆகும்.

- கீழே தரப்பட்ட தொடர்பாடல் மாதிரியை **26** தொடக்கம் **29** வரையான வினாக்களுக்கு விடையளிக்கப் பயன்படுத்துக.




**26.** மேற்படி தொடர்பாடல் மாதிரி பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இது ஓர் மேற்கத்தேயத் தொடர்பாடல் மாதிரி ஆகும்.
(2) இது வெகுசன ஊடகங்களுடன் தொடர்புடையதாக முன்வைக்கப்பட்ட மாதிரியொன்று அல்ல.
(3) இது குழுத் தொடர்பாடலில் அதிக கவனத்தைச் செலுத்துகின்றது.
(4) இது தகவற் பரிமாற்றத்தை வெளிப்படுத்துகின்றது.
(5) இது பெறுநரைத் தூண்டுவதில் கவனத்தைச் செலுத்துகின்றது.

**27.** ஹரோல்ட் டீ லாஸ்வெல்லின் தொடர்பாடல் மாதிரியில் காணக் கிடைக்கும் தொடர்பாடற் செயன்முறையின் அடிப்படைக் கூறொன்று மேற்படி மாதிரியில் **காணக்கிடைக்காமலிருப்பது**
(1) ஊடகம் ஆகும். (2) பின்னூட்டம் ஆகும்.
(3) இரைச்சல் ஆகும். (4) அனுபவக்களம் ஆகும்.
(5) செலுத்தி ஆகும்.

**28.** ஷ்ராம் - ஒஸ்கூட் தொடர்பாடல் மாதிரியானது மேலே **(26)** மற்றும் **(27)** ஆம் வினாக்களின் தொடர்பாடல் மாதிரிகளிலிலிருந்து வேறுபட்டிருப்பது
(1) இரைச்சலின் தன்மையை வெளிப்படுத்தியிருப்பதால் ஆகும்.
(2) குறியீடுகளில் கவனத்தைச் செலுத்தியிருப்பதால் ஆகும்.
(3) பின்னூட்டச் செயன்முறையைக் குறித்து நிற்பதால் ஆகும்.
(4) செலுத்தியின் செயற்பாட்டைக் காட்சிப்படுத்தியிருப்பதால் ஆகும்.
(5) அனுபவக்களம் பற்றிக் குறிப்பிட்டிருப்பதால் ஆகும்.

**29.** ஷெனொன் - வீவர் தொடர்பாடல் மாதிரியில் காணக்கிடைக்கும் தொடர்பாடற் செயன்முறையின் அடிப்படைக் கூறொன்று, மேலே **(26), (27)** மற்றும் **(28)** ஆம் வினாக்களின் குறிப்பிடப்படும் வேறெந்த மாதிரிகளிலும் காணப்பட **முடியாததாக** அமைவது
(1) ஊடகம் ஆகும். (2) இரைச்சல் ஆகும்.
(3) தாக்கம் ஆகும். (4) பின்னூட்டம் ஆகும்.
(5) சந்தர்ப்பம் ஆகும்.

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**30.** அரசாங்கம் நிறுவனமொன்றிலிருந்து பொதுமக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சட்டமுறையற்ற பரிவர்த்தனையொன்று பற்றி, தொடர்புடைய தகவல்களை உறுதிப்படுத்திய பின்னர் அதனை வெளிப்படுத்த செய்திப்பத்திரிகை ஊடகவியலாளராக நீங்கள் எதிர்பார்த்துள்ளீர்கள். இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய மிகப் பொருத்தமான சட்டம்

(1) புலமைச் சொத்துச் சட்டம் ஆகும்.
(2) இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டம் ஆகும்.
(3) தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகும்.
(4) சர்வதேச மனித உரிமைச் சட்டம் ஆகும்.
(5) 1978 அரசியலமைப்பின் 14 (i) (a) உப பிரிவு ஆகும்.

**31.** கணக்கெடுப்பு ஆய்வறிக்கையொன்றை வாசிக்கும் நபரொருவருக்கு முக்கியமாக அமையக்கூடிய மேலதிக ஆவணங்கள் அவசியம் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டியது

(1) அறிமுகத்தில் ஆகும்.
(2) முறையியலில் ஆகும்.
(3) தரவுப் பகுப்பாய்வில் ஆகும்.
(4) பின்னிணைப்பில் ஆகும்.
(5) உசாத்துணைகளில் ஆகும்.

**32.** சிறுகூறுகளாக்குதலுடன் தொடர்புடைய பின்வரும் சிந்தனைகளைக் கருத்திற்கொள்க.

A - இது 20 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வளர்ச்சி பெற்று, 21 ஆம் நூற்றாண்டில் மேலும் விரிவடைந்தது.
B - வீடியோ விளையாட்டுக்கள் மற்றும் தொடரிணை விளையாட்டுக்கள் இந்தச் செயன்முறையின் விரிவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்தன.
C - சமநிலையற்ற மற்றும் வேறுபட்டிருக்கும் துறைசார் பெறுநர்கள் உருவாக்கப்பட்டனர்.
D - ஒருவர் அவரது சொந்த விருப்புக்களின்பேரில் செய்திகளைத் தெரிவுசெய்வதற்குப் பதிலாக, ஒருவர் அச்செய்திகளுக்கு அவசியம் வெளிப்படுத்தப்பட்டேயாவது காணக்கிடைக்கப்படுகின்றது.

மேற்படி கூற்றுகளிலிருந்து சரியான கூற்றுகள்

(1) A, B மாத்திரம் ஆகும்.
(2) C, D மாத்திரம் ஆகும்.
(3) A, B, C மாத்திரம் ஆகும்.
(4) B, C, D மாத்திரம் ஆகும்.
(5) A, B, C, D ஆகிய அனைத்தும் ஆகும்.

**33.** பிரசித்த பண்பாடு பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) நாட்டார் பண்பாட்டின் எச்சங்களைப் பிரசித்த பண்பாடு உள்ளடக்கியிருக்கிறது.
(2) நாட்டார் பண்பாடு எவ்வகையிலும் பிரசித்த பண்பாட்டின் ஒத்திசைவைக் கொண்டிருப்பதாகக் கருதப்படவில்லை.
(3) மரபார்ந்த பண்பாட்டிற்கு நெருக்கமாகப் பொதுமக்களைக் கொண்டுவருவதைப் பிரசித்த பண்பாடு தனது பணியொன்றாகக் கொண்டுள்ளது.
(4) ஒரு தொழிற்துறையாக வளர்வதற்கு அது ஒப்பீட்டளவில் குறைந்தளவு சாத்தியங்களைக் கொண்டுள்ளது.
(5) குறித்ததோர் அமைவிடமும் நேரமும் அவசியம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டியது அதன் அடிப்படை இயல்பாகவுள்ளது.

**34.** வாய்மொழிசாராத் தொடர்பாடல் பற்றி வகுப்பறையில் மாணவர்களிடமிருந்து எழுந்த சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ரவி - அது குறியீடுகளையும் அடையாளங்களையும் பயன்படுத்துகின்றது.
கமலா - அது புகைப்படங்களையும் சுவரொட்டிகளையும் உள்ளடக்கவில்லை.
மது - அது இனத்துவம் பேரில் மாற்றமடைய முடியும்.

இவற்றுள், வாய்மொழித் தொடர்பாடல் பற்றிச் சரியான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பது

(1) ரவியினால் மாத்திரம் ஆகும்.
(2) கமலாவினால் மாத்திரம் ஆகும்.
(3) மதுவினால் மாத்திரம் ஆகும்.
(4) ரவி மற்றும் மதுவினால் மாத்திரம் ஆகும்.
(5) ரவி, கமலா மற்றும் மது ஆகிய அனைவரினாலும் ஆகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**35.** திரைப்படப் பயிற்சிப் பட்டறையொன்றில், திரைப்படத்தின் பிரதான கதாபாத்திரம் வசிக்கும் பகுதியின் சூழலின் அழகைச் சித்திரிப்பதாக கமெரா எடுப்பு (shot) ஒன்றைப் பதிவுசெய்யுமாறு மாணவன் ஒருவருக்கு ஆசிரியர் கூறினார். அதற்கு மிகவும் பொருத்தமான கமெரா எடுப்பு

(1) நீள் எடுப்பு ஆகும். (2) இடைநிலை எடுப்பு ஆகும்.
(3) அண்மைநிலை எடுப்பு ஆகும். (4) மிக அண்மை வீச்சு எடுப்பு ஆகும்.
(5) இடைநிலை அண்மை எடுப்பு ஆகும்.

**36.** தொலைக்காட்சி அலைவரிசையொன்றின் உரிமையாளர் ஒருவர் அது தொடங்கப்பட்டு ஐந்து வருடங்களின் பின்னர் அதனை மற்றுமொருவருக்கு விற்பனை செய்தார். இதனுடன் தொடர்புடைய ஊடகப் போக்கு

(1) கட்டுப்பாட்டுத் தளர்வு ஆகும். (2) நுகர்வுமயம் ஆகும்.
(3) வணிகமயப்படுத்தல் ஆகும். (4) பண்டமயமாக்கல் ஆகும்.
(5) பூகோளமயமாதல் ஆகும்.

**37.** கணக்கெடுப்பு ஆய்வறிக்கையொன்றின் அறிமுகப்பகுதியில் அவசியம் உள்ளடக்கப்படவேண்டியது

(1) ஆய்வில் பயன்படுத்தப்பட்ட தரவு சேகரிப்பு முறைகள் பற்றிய விபரங்கள் ஆகும்.
(2) ஆய்வில் பயன்படுத்தப்பட்ட மூலங்கள் பற்றிய விபரங்கள் ஆகும்.
(3) தரவு சேகரிப்பில் பயன்படுத்தப்பட்ட மாதிரிகள் பற்றிய விபரங்கள் ஆகும்.
(4) ஆய்வுச் செயன்முறைக்குப் பின்னணியாக அமைந்த பிரச்சினை பற்றிய விபரங்கள் ஆகும்.
(5) தரவுப் பகுப்பாய்வின்வழி வெளிப்படுத்தப்பட்ட பெறுதிகள் ஆகும்.

**38.** ஊடகம் தொடர்பான சில பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - எளிமையான மொழிப் பயன்பாடு
B - பல்வகைப் பெறுநர்கள்
C - தாமதமான பின்னூட்டம்
D - அனுபவங்களின் அடிப்படையிலானது

மேற்படி பண்புகளின்பேரில் மிகச் சரியான தெரிவு எது?

(1) A, B பாரம்பரிய ஊடகங்கள் சார்ந்தவை
(2) A, C பாரம்பரிய ஊடகங்கள் சார்ந்தவை
(3) B, C வெகுசன ஊடகங்கள் சார்ந்தவை
(4) A, C பாரம்பரிய ஊடகங்கள் சார்ந்தவை மற்றும் B, D வெகுசன ஊடகங்கள் சார்ந்தவை
(5) A, D பாரம்பரிய ஊடகங்கள் சார்ந்தவை மற்றும் B, C வெகுசன ஊடகங்கள் சார்ந்தவை

**39.** ஊடகப் பண்பாடு பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) அது சமூகத் தேவைகளின் அடிப்டையில் நிபந்தனைக்குட்படுத்தப்படுவதில்லை.
(2) அது வெகுசன ஊடகங்களுடன் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன் வெகுசன ஊடகங்களுடன் சமநேரத்தில் விருத்தியுறவுமில்லை.
(3) அது 'தகவற் சமூகப்' பண்பாடாக விபரிக்கப்பட முடியாதது.
(4) அது மானுட சமூகப் பரிமாண வளர்ச்சியின் தகவல் யுகத்தைச் சார்ந்ததல்ல.
(5) அது தனிப்பட்ட சமூகமயமாக்கம் மற்றும் பண்பாட்டுச் செயன்முறைக்கு உதவுவதாக அமைவதில்லை.

**40.** ஊடகங்கள் மீதான பெண்ணியம்சார் திறனாய்வு பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பெண் உரிமைகள் சார்ந்த பாலியல் சமநிலை அதன் அடிப்படையாகும்.
(2) அது பெண்கள் மீதான ஊடகங்களின் பாகுபாடு பற்றிக் கவனஞ்செலுத்துகின்றது.
(3) அது பெண் ஊடகங்களால் மீளுருவாக்கப்பு (sterotype) செய்யப்படுவதை ஏற்றுக்கொள்கின்றது.
(4) அது பெண்கள் ஊடகங்களில் இயல்பாக வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதை முன்னிலைப்படுத்துகின்றது.
(5) அது பெண்ணியம்சார் விழுமியங்கள் பரவிச் செல்வதற்கு ஊடகங்கள் அவசியம் பங்களிப்புச் செய்யவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கிறது.

**41.** பொதுமக்கள் தொடர்புத் துறையில் "தொடர்பாடல் மூலம் எதுவும் மறைக்கப்படக் கூடாது" என்ற சிந்தனை முக்கியமாகச் சுட்டிக்காட்டப்படுவது

(1) பரப்புரை மாதிரியில் ஆகும்.
(2) பொதுமக்கள் தகவல் மாதிரியில் ஆகும்.
(3) செய்திமுகவர் மாதிரியில் ஆகும்.
(4) இருவழி சமச்சீர் மாதிரியில் ஆகும்.
(5) இருவழி சமச்சீரற்ற மாதிரியில் ஆகும்.

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**42.** தகவலறியும் உரிமையை ஓர் அடிப்படை உரிமையாக நாட்டின் அரசியலமைப்பின் எந்தத் திருத்தம் உறுதிப்படுத்துகின்றது?

(1) 13 ஆம் திருத்தம் (2) 15 ஆம் திருத்தம் (3) 18 ஆம் திருத்தம்
(4) 19 ஆம் திருத்தம் (5) 20 ஆம் திருத்தம்

**43.** விளையாட்டுப் போட்டியில் சங்கிலியன் இல்லத்தின் விளையாட்டு வீரரான நிமலன் நிகழ்வு முகாமையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். நிமலனுக்கான பணியில் குறைந்தபட்சத் தொடர்புடையது

(1) நெருக்கடி முகாமைத்துவம் ஆகும்.
(2) இலக்குக் குழுக்களை அடையாளம் காணல் ஆகும்.
(3) இடமொன்றைப் பெற்றுக் கொள்ளல் ஆகும்.
(4) வரவு செலவுகளைத் தீர்மானித்தல் ஆகும்.
(5) அறிவிப்புச் செய்தல் ஆகும்.

**44.** சில ஊடக ஒழுங்குபடுத்தல் அணுகுமுறைகளும் பண்புகளும் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | அணுகுமுறை | | பண்பு |
|---|---|---|---|
| A - | சுய ஒழுங்குபடுத்தல் | X - | உயர் அரசியல் அதிகாரம் |
| B- | கூட்டு ஒழுங்குபடுத்தல் | Y - | அரசாங்கத்தின் தலையீடுகள் இல்லை |
| C - | சட்டரீதியான ஒழுங்குபடுத்தல் | Z - | சட்டத்தினால் ஸ்தாபிக்கப்படுவது |

மேற்படி அணுகுமுறைகளுடன் தொடர்புடைய பண்புகள் ஒத்திசையும் தெரிவினைத் தேர்ந்தெடுக்குக.

(1) AX, BZ, CY (2) AX, BY, CZ (3) AY, BZ, CX
(4) AY, BX, CZ (5) AZ, BY, CX

**45.** வெகுசன ஊடகங்களின் வகிபங்குடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) தகவலைக் கவனமாக அளித்தல் என்பது கண்காணித்தல் ஆகும்.
(2) வெவ்வேறு சம்பவங்களை மீளாய்வு செய்வதும் அவற்றை முன்வைப்பதும் தகவல் வழங்குவதாகும்.
(3) தனியாள், சமூக நடத்தைகள் மற்றும் எதிர்பார்ப்புகளில் மாற்றங்களை உருவாக்குவது சமூகமயமாக்குதலாகும்.
(4) ஆட்களுக்கும் வெவ்வேறு நிறுவனங்களுக்கும் இடையே பரஸ்பர உறவுகளை விருத்தி செய்வது அறிவுரை வழங்குதலாகும்.
(5) சமூக விழுமியங்களைப் பொதுமக்கள் அறியச்செய்வதும், பொதுவான பிரச்சினைகள் மற்றும் சவால்களை அவர்கள் அடையாளங்காண அனுமதிப்பதும் தகவலளித்தல் ஆகும்.

**46.** ஐக்கிய நாடுகள் சபை முன்வைத்த இடைத்தொடர்பு விருத்திக்குப் பங்களிப்புச் **செய்ய முடியாத** ஓர் தொடர்பாடல் பிரவேசம்

(1) ஒழுங்குபடுத்தலுக்கான தொடர்பாடல் ஆகும்.
(2) சமூக மாற்றங்களுக்கான தொடர்பாடல் ஆகும்.
(3) சூழல் சமநிலைக்கான தொடர்பாடல் ஆகும்.
(4) நடத்தை மாற்றத்துக்கான தொடர்பாடல் ஆகும்.
(5) வறுமையை இழிவளவாக்குவதற்கான தொடர்பாடல் ஆகும்.

**47.** ஒப்பனைப் பொருட்களை விற்பனை செய்யும் கம்பனியொன்றின் இணையத்தளத்தில் தனது வங்கிக் கணக்கு விபரங்களைப் பதிவுசெய்த நிமலா, தான் நிதி மோசடியொன்றினால் பாதிக்கப்பட்டதை உணர்ந்து கொண்டார். இதற்குத் தீர்வொன்றினைப் பெறுமுகமாக அவர் புகாரிட வேண்டியது

(1) குறித்த ஒப்பனைப் பொருள் கம்பனியிடம் ஆகும்.
(2) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிடம் ஆகும்.
(3) தான் வங்கிக் கணக்கினை வைத்திருக்கும் வங்கியிடம் ஆகும்.
(4) இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையத்திடம் ஆகும்.
(5) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஆகும்.

[பக். 8 ஐப் பார்க்க

**48.** கணக்கெடுப்பு ஆய்வறிக்கையொன்றை எழுதும்போது, ஆய்விற்காக உசாத்துணையாகப் பயன்படுத்தப்பட்ட மூலங்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டியது அவசியமாகும். அந்த மூலம் ஒரு நூலாயின் உசாத்துணையாகச் சேர்க்கப்படும் **முக்கியத்துவமற்றது**

(1) நூலாசிரியர் பெயர் மற்றும் நூலின் பெயர்
(2) நூலின் பெயர் மற்றும் வெளியிடப்பட்ட வருடம்
(3) வெளியிடப்பட்ட வருடம் மற்றும் வெளியீட்டு நிறுவனம்
(4) வெளியீட்டு நிறுவனம் மற்றும் அதன் அமைவிடம்
(5) அச்சிட்டவர் மற்றும் விநியோகஸ்தர்கள்

**49.** குறியீடுகள் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) சில குறியீடுகள் பார்ப்பதற்கு முடியாதவை.
(2) சைகைகள் மற்றும் தோற்றங்கள் குறியீடுகளல்ல.
(3) குறியீடுகள் தவறானவையாயின் அங்கு தொடர்பாடல் இருக்காது.
(4) உணர்வுகளை வெளிப்படுத்தக் குறியீடுகள் தேவையற்றவை.
(5) வாசனை குறியீடாகக் கொள்ளப்பட முடியாதது.

**50.** தேவைகள், அறிவு மற்றும் திறன்களை விருத்திசெய்வதற்கு பணி பற்றிய நிபுணத்துவம் நபரொருவருக்கு மிகப் பயனுள்ளதாகும். அதனை விருத்தி செய்வதற்கு அவசியமாவது

(1) தேவைகளை மையப்படுத்துதல் ஆகும்.
(2) அபிவிருத்திக்கான தொடர்பாடல் எதிர்பார்ப்புகள் ஆகும்.
(3) சுயநிர்ணயத்திற்கான திறமைகள் ஆகும்.
(4) பங்குபற்றல் ஜனநாயகம் பற்றிய உணர்வுகள் ஆகும்.
(5) சிறந்த சூழலைக் கட்டியமைக்கும் சூழல் சமநிலை ஆகும்.

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

AL/2024/29/T-II

003020

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

**29 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **40** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** தொடர்பாடல் கற்கைகளில், பாரம்பரிய ஊடகங்களுடன் வெகுசன ஊடகங்கள் மீதும் கவனம் செலுத்தப்படுகின்றது.

(i) 'தொடர்பாடல் கற்கைகள்' தனியானதொரு பாடமாக வளர்ச்சி பெறுவதற்கான அடிப்படையை வழங்கிய **இரண்டு** பிரதான பாடத்துறைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) தொடர்பாடற் செயன்முறையின் முக்கிய கூறுகளான குறிமுறையாக்கம் மற்றும் குறிமுறையவிழ்ப்பு ஆகியவற்றில் இடம்பெறுபவை எவையென்பதைத் தனித்தனியாகச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) பாரம்பரியத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை **மூன்று** அம்சங்களைப் பயன்படுத்தி உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) வெகுசன தொடர்பாடலின் **நான்கு** விசேட பண்புகளை ஆளிடைத் தொடர்பாடலுடன் ஒப்பிட்டுக் கலந்துரையாடுக. (16 புள்ளிகள்)

**2.** (i) மானுடத் தொடர்பாடலில் ஊடகங்களாகப் பயன்படுவது எது? (04 புள்ளிகள்)

(ii) பொதுசனத் தொடர்பாடலின் ஆதாயங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) பின்வரும் அம்சங்களுடன் தொடர்புடையதாகப் படைப்பாக்க எழுத்து பற்றிச் சுருக்கமாகக் கருத்திடுக.

(அ) படைப்பாக்க எழுத்தின் குறிக்கோள்கள்
(ஆ) படைப்பாக்க எழுத்து வகைகள்
(இ) படைப்பாக்க மொழிநடை
(12 புள்ளிகள்)

(iv) பொதுமக்கள் தொடர்பின் **இரண்டு** உபகரணங்கள் மற்றும் **இரண்டு** முறைகளை உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**3.** பாடசாலை மாணவர்களின் கவிதைப் படைப்புகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட நூலொன்றின் விழாவிற்கு நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள்.

(i) கவிதைப் படைப்பாக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் வகை எது? (04 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் நீங்கள் குறிப்பிட்ட தொடர்பாடல் வகையைப் பயன்படுத்துவதன் **இரண்டு** ஆதாயங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) படைப்பாக்கத்திற்கு முக்கியமான **இரண்டு** பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

(அ) கற்பனை (imagination)

(ஆ) மீள மீள நிகழ்த்தப்படும் பயிற்சி (repetitive practice) (12 புள்ளிகள்)

(iv) நூல் வெளியீட்டை ஒழுங்கமைப்பதற்கு நிகழ்வு முகாமையாளராக நீங்கள் செயற்படுவதாகக் கொண்டு, நிகழ்வைத் திட்டமிடுவதுடன் தொடர்புடைய **நான்கு** பணிகளை விபரிக்குக. (16 புள்ளிகள்)

**4.** அபிவிருத்தி மற்றும் பண்பாட்டுடன் தொடர்புடைய செயற்பாடுகள் தொடர்பாடலுடன் முறைமையாக இணைக்கப்பட்டுள்ளன.

(i) தத்தமது அபிவிருத்திக்குப் பொருத்தமாக அந்தந்த நாடுகள் தமது சொந்தத் தந்திரோபாயங்களை உருவாக்கிப் பிரயோகிக்கும்போது அதற்குப் பயன்படுத்தப்படும் பதம் எது? (04 புள்ளிகள்)

(ii) 'பண்பாடு' என்பதை இ. பி. ரெய்லர் முன்வைத்த வரைவிலக்கணத்துடன் தொடர்புடையதாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) இரண்டு அல்லது அதிகமான பகுதியினரிடையே எழக்கூடுமான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குப் பின்வரும் படிநிலைகளில் பயன்படும் வழிமுறைகளை விபரிக்குக.

(அ) முரண்பாட்டைப் புரிந்துகொள்ளல்

(ஆ) தீர்வொன்றைத் தெரிவுசெய்தல்

(இ) மூன்றாம் பகுதியினரை நடுவராக அழைத்துக்கொள்ளல் (12 புள்ளிகள்)

(iv) பிரசித்த பண்பாட்டின் பின்வரும் பண்புகளை குறிப்பாக தொலைக்காட்சி ஊடகத்துடன் தொடர்புடையதாக உதாரணங்களுடன் விளக்குக.

(அ) ஆழமற்றிருத்தல் மற்றும் எளிமையாயிருத்தல்

(ஆ) பாரிய அளவிலான உற்பத்தி

(இ) அருகியிருக்கும் கலைத்துவம்

(ஈ) ஒழுக்கம்சார் பிரச்சினைகளுக்குக் காரணமாதல் (16 புள்ளிகள்)

**5.** 'ஊடக ஒழுங்குபடுத்தலுக்கான சமூகத்தேவை' பற்றிய கருத்துக்களைப் பெறுவதான ஆய்வொன்றுக்காக நீங்கள் தரவுகளைச் சேகரிப்பதாகக் கற்பனை செய்துகொள்க.

(i) இலங்கையில் செயற்படும் ஊடக ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) ஆய்வின் அடிப்படை வகைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) மேற்படி ஆய்விற்காகத் தரவுகளைத் திரட்டும்போது அவசியம் பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறிகள் **மூன்றினை** விபரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) இலங்கையில் ஊடக ஒழுங்குபடுத்தலின் தேவை பற்றிப் பின்வரும் அம்சங்களின்பேரில் உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

(அ) பொதுசன அமைதியைப் பாதுகாத்தல்

(ஆ) தனிப்பட்டோர் உரிமைகள் மீதான விளைவுகளைக் கட்டுப்படுத்தல் (16 புள்ளிகள்)

0003961

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



6. மானுடத் தொடர்பாடல் செயன்முறை காலத்துடன் நவீனமயப்படுகின்றது.

(i) பாரம்பரிய ஊடகத்தின் பண்புகள் **இரண்டினை** எழுதுக. (04 புள்ளிகள்)

(ii) தொடர்பாடலுக்குப் பயன்படும் சமூக ஊடகச் செயலிகள் (social media applications) **இரண்டின்** செயற்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஊடக உள்ளடக்கங்களைத் தயாரிப்பதற்கு செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) பயன்படக்கூடுமான வழியைக் குறிப்பாகப் பின்வரும் சந்தர்ப்பங்களுடன் தொடர்புடையதாக விபரிக்குக.

(அ) பாடல் உருவாக்கம்

(ஆ) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அளிக்கை செய்தல் (12 புள்ளிகள்)

(iv) சிறுகூறுகளாக்குதலின் பண்புகளை குறிப்பாக பின்வரும் ஊடகங்களுடன் தொடர்புடையதாக விளக்குக.

(அ) அச்சு ஊடகம்

(ஆ) சமூக ஊடகம் (16 புள்ளிகள்)

7. ஊடக விளங்கறிவிற்கும் ஊடகத்திறனாய்விற்கும் நெருக்கமான தொடர்புள்ளது.

(i) விளங்கறிவு என்பது யாது? (04 புள்ளிகள்)

(ii) அறிவுக் கட்டமைப்புக்களை விருத்தி செய்வதற்குத் தகவல் பயன்படுமாற்றலைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) பெண்ணியம்சார் திறனாய்வின் **மூன்று** முக்கிய அம்சங்களை உங்களால் அடையாளப்படுத்தப்படும் ஊடகத்துடன் தொடர்புடையதாக விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) ஊடகச் செய்திகளைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பின்வரும் காரணிகள் பயன்படுமாற்றலை உதாரணங்களுடன் மதிப்பாய்வு செய்க.

(அ) பொருத்தப்பாடு

(ஆ) தூண்டல்

(இ) நம்பகத்தன்மை

(ஈ) திரிபுபடுத்தல் (16 புள்ளிகள்)


* * *

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

## ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!